**News:** Free stationeries were given to 1,300 orphan school students by Sairam Institutions.

**Newspaper : viduthalai. Published:11/7/16**

# சாய்ராம் பொறியியல் கல்லூரியில் மாணவர்களுக்கு நலத்திட்ட உதவிகள்




**தாம்பரம், ஜூலை 11** சென்னை மேற்கு தாம்பரம், சாய்ராம் பொறியியல் கல்லூரியில் ஞாயிற்றுக் கிழமை நடைபெற்ற நிகழ்ச்சியில் 1,300 ஆதரவற்ற பள்ளிக் குழந்தைகளுக்கு கல்வி உபகரணங்கள் வழங்கப்பட்டன.

சாய்ராம் கல்விக் குழுமத் தலைவர் லியோமுத்து முதலாண்டு நினைவேந்தல், அவரது சிலைக்கான அடிக்கல்நாட்டு விழா கல்லூரி வளாகத்தில் நடைபெற்றது.

மறைந்த லியோ முத்துவின் கல்வி, சமூக நலப்பணிகளை இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் மூத்த தலைவர் தா.பாண்டியன், ஆர்.எம்.கே.கல்விக் குழுமத் தலைவர் முனிரத்தினம், ஜெயா கல்விக் குழுமத் தலைவர் பேராசிரியர் ஏ.கனகராஜ், காந்தி ஆகியோர் பாராட்டினர். அவர் விட்டுச் சென்ற பணிகளை தொடர்ந்து நிறைவேற்றி வரும் சாய்பிரகாஷ் லியோ முத்துவுக்கு வாழ்த்து கூறினர்.

நிகழ்ச்சியில் அகரம் கல்வி அறக்கட்டளை நிர்வாகி ஜெய சிறீ பேசியதாவது:

அகரம் அறக்கட்டளை சார்பில் ஆண்டுதோறும் தேர்வு செய்யப்படும் அரசு பள்ளிகளில் பயின்ற கிராமப்புற மாணவர்களுக்கு பொறியியல் கல்வி உள்ளிட்ட அனைத்து வசதிகளையும் சாய்ராம் கல்வி நிறுவனம் இலவசமாக வழங்கி ஆதரித்து வருகிறது.

தற்போது எங்கள் அறக்கட்டளை தொடங்கவிருக்கும் கல்வி தொழில் பயிற்சி மய்யத்திற்கு, இடம் தந்து உதவுமாறு மறைந்த லியோ முத்துவிடம் கோரி இருந்தோம். எங்கள் கோரிக்கையை ஏற்று மதுராந்தகத்தில் ஜி.எஸ்.டி.சாலை அருகில் ஒரு ஏக்கர் நிலத்தை அன்பளிப்பாக வழங்கி பிரமிக்க வைத்த மாமனிதர் லியோமுத்து என்று ஜெயசிறீ தெரிவித்தார்.

மறைந்த முன்னாள் குடியரசுத் தலைவர் ஏ.பி.ஜெ. அப்துல்கலாமின் முன்னாள் உதவியாளரும், விஞ்ஞானியுமான பொன்ராஜ் பேசும்போது, "பொறியியல் பட்டதாரிகள் விவசாயம், நகர்ப்புற வளர்ச்சி, மின் உற்பத்தி ஆகிய துறைகளில் புதிய கண்டுபிடிப்புகளை உருவாக்க உதவும் புதுமை படைப்பு மய்யம் தொடங்க, சாய்ராம் கல்வி நிறுவனம் முதன்முதலாக ரூ.25 லட்சம் வழங்கி ஊக்குவித்துள்ளது' என்றார்.

நிகழ்ச்சியில் சிறீசாய்ராம் கல்விக் குழுமத் தலைவர் கலைச் செல்வி லியோமுத்து, தலைமை செயல் அதிகாரி சாய்பிரகாஷ் லியோமுத்து, ரேவதி லியோ முத்து, கல்வி அறக்கட்டளை உறுப்பினர் ஷர்மிளா ராஜா உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

Pg. No-5 11/7/16 viduthalai